# GST ROAD NEWS

Weekly News Paper

Email:gstroadnews@gmail.com **CHROMPET** www.gstroadnews.com

Chromepet, Radha Nagar, Hasthinapuram, New Colony, Nehru Nagar

Vol:13 Issue - 32 | 23 Nov 2025 - 29 Nov 2025 | 4 Pages - Free Circulation Ct: 99628 80902


## தங்கம் விலை உயர்வு

சென்னையில் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1360 அதிகரித்து ஒரு சவரன் ரூ.93,040க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.170 அதிகரித்து ஒரு கிராம் ரூ.11,630க்கு விற்பனை ஆகிறது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.3 உயர்ந்து ரூ.172க்கு செய்யப்பட்டு வருகிறது.


**ONLINE JAPANESE CLASSES**
- For Kids
- Students
- Professionals
- Master Japanese language from Beginner to Advanced Level
- Flexible Online Sessions
- Experienced Trainers

Contact : NOVALEARN ACADEMY 91769 57977 NovaLearn ACADEMY



**PREMIUM FLATS FOR SALE @ CHROMPET**
THIRUMALAI NAGAR, Nr. Zion School


Natarajan Apartment

READY TO MOVE
3 BHK-1240 Sqft
2 BHK-980 Sqft
☑ Lift ☑ CCP ☑ CCTV ☑ As Per Vasthu



**3 BHK INDEPENDENT DUPLEX HOUSE FOR SALE@ CHROMPET**
Site Address : Hasthinapuram, Saraswathi Nagar Nr. Thirumalai Nagar, Zion School

3 BHK
As per Vasthu, CCP, Loan Arranged



MANICKAM CONSTRUCTION
Off.Address: Plot No.37, 7th Main Road, Vinobaji Nagar, Hasthinapuram, Chennai - 64.
94442 14382 / 94442 55004



**FLATS FOR SALE @ CHROMEPET NEW COLONY**
3BHK 1709 Sqft
READY FOR OCCUPATION

AMENITIES:
- COVERED CAR PARKING
- LIFT
- VAASTHU
- LUXURY FINISH



ASV LIFE SPACES
98842 80255



**IND.VILLA FOR SALE @CHROMPET, THIRUMALAI NAGAR**
Nr.PONNIYAMMAN KOVIL MAYILAI RAMAMURTHY ST
3 BHK
LAND AREA - 1200 sqft
BUILD UP AREA 1900 sqft
☑ 24 Hrs Water ☑ As per vasthu ☑ 100% Red Bricks



GJ CONSTRUCTION
98409 41585




**FLATS FOR SALE**
@ CHROMEPET
Paul Victor Street, Near MIT Bridge 100 Mtrs From GST Road
Deluxe Flats 2 & 3 BHK - 954, 1023 & 1103 sqft

@ KUMBAKONAM
Solaiappan Street, 100 Mtrs from River Kaveri 700 Mtrs From Kumbeswarar Temple
1 & 2 BHK - 410, 671 & 644 Sqft

Balaji Homes
98408 40017 / 88382 74383



**FLATS FOR SALE @ CHROMPET**
HASTHINAPURAM BUS STAND OPP
NR VIVEKANANDHA NSN SCHOOLS



AVAILABLE 2BHK 901-921 Sqft
AMENITIES
With Lift | As Per Vaasthu | CCP | CCTV | Videodoor Phone | Ev Charger Point | AUTOMATIC WATER TANK LEVELLER | Red Bricks Construction

INDIVIDUAL WATER TANK
ANUJ HOMES 81481 11101, 94446 54776



**FLATS FOR SALE @CHROMPET**
NEXT TO NSN SCHOOL RP ROAD
NEAR MIT & KUMARAKUNDRAM KOIL

2 & 3 BHK
933 - 1053 - 1450 Sqft
ONLY 3 UNITS LEFT
AMENITIES:
* LIFT * CCTV
* CCP * VASTHU
* VIDEO DOOR PHONE

JETTAA'S VISHAKA
READY TO MOVE



JETTAA BUILDERS
80150 59333 / 96267 72679
Jettaabuilders@gmail.com / jettaabuildersprivatelimited@gmail.com



**PREMIUM 2 BHK FLATS @ CHROMPET- RADHA NAGAR**
READY TO OCCUPY



2 BHK-992-Sqft
LIFT FACILITY / CCP / AS PER VAASTHU
VRM BUILDERS
98400 34209 / 98408 53756



## PREMIUM 2,3,4 BHK FLATS FOR SALE @ CHROMEPET

**PADMANABHA NAGAR**
Nr. KARUMARI AMMAN TEMPLE
NEW Projects
24 HRS POWER BACKUP*



4 BHK - 1825 Sqft
2 BHK - 941 & 898 Sqft

**KRISHNA NAGAR**
Nr. HASTHINAPURAM BUS STAND
READY TO MOVE



24 HRS POWER BACKUP*
3 BHK - 1287 Sqft

**BASHYAM NAGAR**
Nr. ABIRAMI KALYANA MANDABAM
NEW Projects
24 HRS POWER BACKUP*



3 BHK - 1132 Sqft
2 BHK - 1028 Sqft

Specification: With Lift | As Per Vaasthu | CCP | CCTV | Videodoor Phone | Ev Charger Point | AUTOMATIC WATER TANK LEVELLER | Red Bricks Construction

Sankar Constructions
98416 59929 / 98416 59930

Project Approved by: LIC HFL LIC HOUSING FINANCE LTD | HDFC BANK | SBI

# கார்த்திகையில் கண் திறக்கும் யோக நரசிம்மர்



இந்தியாவில் உள்ள பிரசித்தி பெற்ற நரசிம்மர் கோவில்களில் ஒன்று தமிழ்நாட்டில் அமைந்திருக்கிறது. மகாவிஷ்ணுவின் அவதாரங்களில் மிக உக்கிரமான அவதாரமாக நரசிம்மர் கருதப்படுகிறார். இரணியனை வதம் செய்த பிறகு, உக்ரம் தணிந்த பிறகு, மலை மீது யோக நிலையில் அமைதியாக அமர்ந்து அருள் பாலிக்கும் இடம் தான் சோளிங்கர் யோக நரசிம்மர் கோவிலாகும். இந்த கோவிலில் கார்த்திகை மாதம் மிக விசேஷமான மாதமாகும். கார்த்திகை மாதம் யோக நரசிம்ம சுவாமி வீற்றிருக்கும் சோளிங்கர் தலத்து நரசிம்மர் கண்திறந்து பார்ப்பதாக புராணங்களில் கூறப்பட்டுள்ளது. யோக நரசிம்ம சுவாமி வீற்றிருக்கும் திருத் தலங்களில் சோளிங்கர் உயர்ந்ததாக கருதப் படுகிறது.நரசிம்மர் யோக நிலையில் கண்களை மூடிக்கொண்டு யோக நரசிம்மர் ஆகவும், தாயார் அமிர்தவல்லி ஆகவும் அருள்பாலிக்கின்றனர். அதுமட்டும்இல்லாமல் சோளிங்கரில் நரசிம்மரையும் தாயாரையும் தரிசித்த பிறகு 24 நிமிடங்கள் இத்தலத்தில் இருந்தாலே உங்களுடைய பிரச்சனைகள் அனைத்தும் விலகும் என்பது ஐதீகம். விஸ்வாமித்ரர் இங்கே ஒரு நாழிகையில் யோக நரசிம் மரை துதி செய்து ப்ருஹ்மரிஷி பட்டத்தை பெற்றதாக ஐதீகம். மலை மீது அமர்ந்திருக்கும் இந்த யோக நரசிம்மருக்கு அருகிலேயே ஆஞ்சநேயரும் யோக ஆஞ்சநேயராக மற்றொரு மலையில் அருள் பாலிக்கிறார். இவர் நான்கு கரங் களுடன் சதுர் புஜ ஆஞ்சநேயராகக் காட்சியளிக்கின்றார். சோளிங்கர் நரசிம்மரை தரிசித்தால் வாழ்வில் இருக்கும் அனைத்து தடைகளும் நீங்கும் என்பது ஐதீகம். இத்தலத்தில் ஒரு நாள் தங்கினாலும் பீடைகள் தொலைந்து மோக்ஷம் சித்திக்கும் என்று ஸ்தல புராணம் கூறுகிறது. மகிமை வாய்ந்த நரசிம்மர் பல் வேறு வடிவங்களில் பல் வேறு தலங் களில் கோயில் கொண்டு அருள்கிறார். அவற்றில் ஒன்று, சோளிங்கர். ஒரு நாழிகை நேரம் இத்தலத்தில் தங்கியிருந்தாலே வீடுபேறு வழங்கும் புண்ணிய தலம் இது. சோளிங்கர் என அழைக்கப் படும் சோழ சிங்க புரம் நரசிம் மர் பெயரால் அமைந்ததாகும்.பின் கரங்களில் சங்க சக்கரம் விளங்க, முன் கரங்களில் சிம்ம கர்ண முத்திரை களைக் கொண்டுள்ளார். ஒரு ஆண்டில் பதினோரு மாதங்கள் இத்தலத்தில் யோக நிலையிலேயே, கண்மூடி அமர்ந்திருக்கும் இந்த நரசிம்மர் கார்த்திகை மாதம் மட்டும் கண் திறப்பதாக கூறுகின்றனர். ஆகவே இத்தலத்தில் கார்த்திகை மாதம் முழுக்க திருவிழாவாக கொண்டாடப்படுகிறது. கார்த்திகை மாதம் வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்று கிழமைகளில் இந்த கோவிலில் சிறப்பு அபிஷேகமும், ஆராதனையும் நடைபெறும். அதிலும் கார்த்திகை ஞாயிற்று கிழமைகளில் மட்டும் நரசிம்மரை தரிசிக்க லட்சக்கணக்கான பக்தர்கள் வருவார்கள். எனவே இந்த நாட்களில் பக்தர்களின் கூட்டம் அதிகமாக இருக்கும். கார்த்திகை ஞாயிற்று கிழமைகளில் கோவில் நடை அதிகாலை 4 மணிக்கே திறக்கப்பட்டு அபிஷேகமும், பூஜைகளும் நடக்கும். இதனால் கார்த்திகை மாதத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் விழாவில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டு பிரார்த்தனைகளைச் செலுத்துகின்றனர்.

# கார்த்திகை சஷ்டி... கந்தனை வணங்குவோம்; கவலைகள் பறந்தோடும்!



கார்த்திகை மாத சஷ்டியில்... கந்தக் கடவுளை வணங்கினால் நம் கவலைகளையெல்லாம் பறந்தோடச் செய்வான் முத்துக்குமரன். கார்த்திகை மாதத்தின் சஷ்டி என்பது சக்தி வேலனுக்கு உரிய நாள். தைமாத பூசம், பங்குனி உத்திரம், வைகாசியின் விசாகம், ஆடியின் கிருத்திகை முதலானவையெல்லாம் முருகனுக்கு உகந்த அற்புதமான நாட்கள். இந்த நாட்களில், முருகப்பெருமான் குடிகொண்டிருக்கும் ஆலயங்களில், விசேஷ வழிபாடுகளும் பூஜைகளும் விமரிசையாக நடந்தேறும்.கார்த்திகை மாதம் அற்புதமான மாதம். கார்த்திகை என்பதே முருகப் பெருமானைக் குறிக்கும். கார்த்திகை மாதத்து சஷ்டி மிக உன்னதமான நன்னாள்.இன்றைய நாளில், கந்தபெருமானை வணங்குங்கள்.கந்தசஷ்டி கவசம் பாராயணம் செய்து கந்த பெருமானை வணங்குங்கள். செவ்வாய் தோஷம் நீங்கும். திருமண வரம் கைகூடும். கேட்ட வரங்களைத் தந்திடுவான் கந்தன். வீடுமனை யோகத்தை அளித்திடுவான். ஆகவே. வேலவனை வேண்டுவோம் வேதனைகளையெல்லாம் தீர்த்துவைப்பான் வெற்றி வடிவேலன். முருகப் பெருமான், உலகாளும் சிவ பெருமானின் மைந்தன் என்றாலும் ஞானகுரு என்றே முருகப் பெருமானைப் போற்றுகிறது புராணம். பிரணவப் பொருளை எடுத்துரைத்தவன், அப்பனுக்கே பாடம் சொன்ன சுப்பையன் என்றெல்லாம் புகழ்கிறது புராணம். ஞானத்தையும் யோகத்தையும் தரக்கூடியவன்.செவ்வாய்க்கு அதிபதி முருகக் கடவுள் பூமிகாரகன். செவ்வாய் பகவானை வழிபடுவதும் முருகப் பெருமானை வழிபடுவதும் வைத்தீஸ்வரன் கோவிலில் உள்ள அங்காரகனை வழிபடுவதும் மிகுந்த பலன்களை தந்தருளக்கூடியது. வீட்டில் காலையும் மாலையும் விளக் கேற்றுங்கள். கந்த சஷ்டி கவசம் பாராயணம் செய்யுங்கள். சொந்த வீடு வாங்கும் விருப்பம் தள்ளிப்போகிறதே என்றிருப்பவர்கள், முருகப் பெருமானுக்கு எலுமிச்சை சாதம் நைவேத்தியம் செய்து வேண்டிக்கொள்ளுங்கள். கேட்ட வரங்களைத் தந்திடுவான் கந்தன்.வேதனைகளையெல்லாம் போக்கியருளுவான் ஞானக்குமரன்.

உங்கள் வீட்டை உடனே வாடகைக்கு விட வேண்டுமா?
GST ROAD NEWS-ல்
விளம்பரம் செய்ய 2 x 4cm Rs.525 /-(Colour) மட்டுமே
044 - 22236399 / 89395 26999

# வீட்டில் உள்ள தீய சக்திகளை விரட்டும் ஆகாச கருடன்




ஆகாச கருடன் வீட்டில் உள்ளவர்கள் மாந்திரீக தீய விளைவுகளில் இருந்தும் திருஷ்டி, அடுத்தவரின் பொறாமை முதலானவற்றில் இருந்தும் காக்கப்படுவார்கள். ஆகாசக் கிழங்கில் 16 வகைகள் உள்ளன. இதன் இலையும் கிழங்கும் நமக்கு பலன் தரக்கூடியன என்கிறார்கள் சித்த மருத்துவர்கள். மூலிகைகளில் அஷ்டகர்ம மூலிகைகள் என்பவை மிகச் சிறப்பு வாய்ந்தவை. இவை அஷ்ட கர்மமான மாந்திரீக கர்மங்களுக்கு உதவும் என்கிறார்கள் ஜோதிடர்கள். இதற்கு சாகாமூலி என்ற பெயரும் உண்டு. இந்தக் கிழங்கில் சில அமானுஷ்ய சக்திகள் உண்டு. வீட்டிற்கும் நமக்கும் ஏற்படும் திருஷ்டி, தோஷங்களைப் போக்கும் தன்மை கொண்டது. மேலும் எதிரிகளால் ஏவப்படும் பில்லி, சூன்யம் முதலான மாந்திரீக எதிர் வினைகளை ஈர்த்து தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் தன்மை கொண்டது. இதனால் வீட்டில் உள்ள வர்கள் மாந்திரீக தீய விளைவுகளில் இருந்தும் திருஷ்டி, அடுத்தவரின் பொறாமை முதலானவற்றில் இருந்தும் காக்கப்படுவார்கள். பெரும்பாலான வீடுகளில் இந்த கிழங்கை திருஷ்டிக்காக வீடுகளில் கட்டி தொங்க விடுகின்றனர். வராந்தாவின் மேல் தளத்திலோ அல்லது நிலவரையின் நடுப் பகுதியிலோ இதனை கட்டி வைப்பதால் வீட்டிற்குள் எந்த வித விஷமுள்ள ஜந்துக்களும், சிறிய பூச்சிகளும் கூட வருவதில்லை என்று கூறப்படுகிறது. ஏனெனில் இதன் வாசம் அவைகளுக்கு பிடிப்பதில்லையாம். உங்கள் வீட்டில் எந்த வகையான விஷ பூச்சிகளும் வராமல் இருப்பதற்கு இந்த முறையை பயன்படுத்திக் கொள்ளலாம். முக்கியமாக பில்லி, சூனியம், ஏவல் போன்ற எத்தகைய தீய சக்திகளும் உங்கள் வீட்டில் இருக்கும் பட்சத்தில் இந்த கிழங்கு அதனை உட்கிரகித்து தன்னை தானே தற்கொலை செய்து கொண்டு அழிந்து விடும். அதாவது கொடிகள் வளராமல் காய்ந்துவிடும். இதனால் அந்த வீட்டில் இருப்போர் பல பிரச்சனைகளில் இருந்து தம்மை பாதுகாத்து கொள்ளலாம். பின்னர் அதற்குரிய பரிகாரங்கள் மேற்கொண்டு அல்லது பூஜைகள் செய்து விட்டு புதியதாக ஒரு கிழங்கை வாங்கி இதே போல் கட்டி வைத்து விடலாம். மாறாக உங்கள் வீட்டில் தீய சக்திகளன்றி நல்ல சக்திகள் இருக்குமேயானால் இந்த கிழங்கு முளைவிட்டு பசுமையான கொடிகளாக வளரக்கூடியது. மிகவும் அழகாக காட்சியளிக்கும். பசுமை தன்மை இருக்கும் வரை உங்கள் இல்லம் மகிழ்ச்சிகரமான இல்லமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இதன் விசித்திரமான தோற்றம், வித விதமான தோற்றம் காரணமாக இதனை கட்டி தொங்கவிட்டால் அதன் நிழல் கருடன் பறப்பது போன்ற பிம்பத்தை உருவாக்கும். இதனால் பாம்புகள் பயந்து ஓடி ஒளிந்து கொள்ளும். ஆகாயத்தில் கருடன் பறப்பது போன்ற தோற்றமுடையதால் இந்த பெயர் பெற்றது என்று கருதப்படுகிறது. வீட்டில் திருஷ்டி முழுவதும் கழிந்துவிடும். இல்லத்தில் பொன்னும்பொருளும்சேரும்.

# அஸ்தினாபுரத்தில் நவபாஷாண தண்டாயுதபாணி கோவிலில் சத்ரு சம்கார ஹோமம்



குரோம்பேட்டை, அஸ்தினாபுரத்தில் அமைந்துள்ள, அருள்மிகு நவபாஷாண ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில், வருகின்ற 26 ஆம் தேதி புதன்கிழமை முதல், ஒவ்வொரு மாதமும் சுக்ல சஷ்டியை திதியன்று, சத்ரு சம்ஹார ஹோமம் நடைபெற உள்ளது. ஹோமத்திற்கு 6 விதமான புஷ்பங்கள், 6 விதமான சித்ரா அன்னங்கள், 6 விதமான பழ வகைகள், 6 விதமான ஹோம சமித்துக்கள், மற்றும் பசு விராட்டி, நெய், மற்ற பழ வகைகள் எல்லாம் தேவைப்படுகிறது. பக்தர்கள் தேவைப் படுகின்ற பொருட் களை தந்து இறை அருளுக்கு பாத்திரமாகுமாறு ஆலய நிர்வாகம் கேட்டுக்கொள்கிறார்கள்.

தொடர்புக்கு : 98416 59593

# சபரிமலை செல்ல 30 லட்சம் பேர் முன்பதிவு

சபரிமலையில் முந்தைய வருடங்களை விட இந்த மண்டல காலத்தில் தரிசனத்திற்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்துள்ளது.இதனால் பம்பையிலேயே பக்தர்கள் 10 மணிநேரத்திற்கு மேல் தடுத்து நிறுத்தப்பட்டனர். ஏராளமானோர் தரிசனம் செய்யாமல் திரும்பிச் செல்லும் நிலையும் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து போதிய வசதிகள் ஏற்படுத்தாத திருவிதாங்கூர் தேவசம் போர்டுக்கு கேரள உயர்நீதி மன்றம் கடும் கண்டனம் தெரிவித்தது. வரும் 24ம் தேதி வரை உடனடி முன்பதிவு எண்ணிக்கையை 20 ஆயிரத்திலிருந்து 5 ஆயிரமாக குறைக்க கேரளா உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனால் கடந்த 3 நாட்களாக தினமும் சராசரியாக 74 ஆயிரம் பக்தர்கள் தரிசனம் செய்தனர். கேரள உயர்நீதி மன்றத்தின் இந்த நடவடிக்கையை தொடர்ந்து பக்தர்கள் தற்போது சிரமமின்றி தரிசனம் செய்து வருகின்றனர். இந்நிலையில் டிசம்பர் 25ம் தேதி வரை தரிசனத்திற்கான ஆன்லைன் முன்பதிவு அனைத்தும் முடிவடைந்து விட்டது. இதுவரை ஆன்லைனில் முன்பதிவு செய்த பக்தர்களின் எண்ணிக்கை 30 லட்சத்தை தாண்டியுள்ளது.

# CLASSIFIEDS

## RENTAL

HOUSE FOR RENT - FIRST FLOOR
@ PALLAVARAM CLOSE TO AIRPORT & RAILWAY STATION
3BHK AC,CP,CCTV-GARDEN
TV NET,FULLY FURNISHED
99405 07235

NEW FLAT FOR RENT
@ CHITLAPAKKAM
NR. NSN , VIOLET & VIVEKANANDA SCHOOLS
2BHK - 2ND FLOOR
LIFT, CAR PARKING
PURE VEGETARIAN (BRAHMINS)
80156 61556

INDEPENDENT
1 BHK HOUSE
FOR RENT
@CHROMEPET, THIRUMALAI NGR
SPACIOUS HALL, KITCHEN, BED ROOM
9840524769

FLAT FOR RENT
@ CHROMPET
SUNDARATHAMMAL COLONY
2BHK - 850 Sqft
1st FLOOR ( NEAR BADAL FLATS)
BRAHMIN FAMILY PREFERRED
98717 14153

FLATS FOR RENTAL
@ CHROMPET
AVAILABLE 2 BHK
PURE VEG
8072230451

AVAILABLE FOR RENT
@CHROMPET
HASTINAPURAM MAIN ROAD
TWO ROOMS WITH KITCHEN
FOR A SMALL FAMILY 2 MEMBERS
99400 44656

2 AND 3 BHK AVAILABLE IN AN INDIVIDUAL HOUSE RENT
@ CHROMEPET
NEAR VAISHNAVA COLLEGE
LIFT, CCTV
CAR PARKING
94441 38822

COMMERCIAL SPACE FOR RENT
@ SELAIYUR - MAHALAKSHMI NAGAR
NO.46 Velachery Main Road
1600 Sqft
1st FLOOR
SUITABLE FOR CLINICS
CORPORATE GODOWN
TUITION CENTRE
MUSIC CLASSES ETC...
87783 09927
94440 73997

COMMERCIAL
SPACE FOR RENT
@ WEST TAMBARAM
2ND FLOOR OPEN TERRACE
3000 Sqft / Size 72 X42
BTS : BULID TO SUIT
IN ACCORDANCE WITH REQUIREMENTS
SUIT FOR: TURF, EVENTS VENUE,
COMMERCIAL PURPOSE, ADVERTISING
88388 40055

## FLAT RESALE

FLATS FOR SALE
@ CHROMPET
RADHA NAGAR
2BHK-700 Sqft ,350UDS
32 LAKHS
GROUND FLOOR / EAST FACING
99620 03409

## FLAT RESALE

2 BHKD FLAT RESALE
@CHROMEPET
NR.NSN SCHOOL RP.ROAD
BUA 760 /UDS 652
OCP, LIFT 24/7 SECURITY
@CAMP ROAD JN (NR.BSNL)
BUA 980 / UDS 452
CCP, LIFT, 24/7 SECURITY
93608 75050
80159 15629

FLAT FOR RESALE
@HASTHINAPURAM
3 BHK , 1900 Sqft
FIRST FLOOR, LIFT, CCP
IND HOUSE FOR SALE
@ CHROMPET
NEMILICHERY
2BHK LAND AREA 575 SQFT
BUILT UP AREA-1640 SQFT CCP
80722 30451

FLAT FOR RESALE
@CHROMPET
@RADHA NAGAR
2BHK-742 Sqft
UDS - 412 Sqft 1st FLOOR
@ HASTHINAPURAM
3BHK 1075 Sqft
5 YRS OLD ,1st FLOOR
LIFT ,CCP
80722 30451

IND HOUSE FOR SALE
@ PALLAVARAM
DHARGAS ROAD
2BHK LAND AREA 575 SQFT
BUILT UP AREA-1640 SQFT CCP
FLATS FOR SALE
@ CHROMPET
1,2,3 BHK
AVAILABLE
80722 30451

## NEW FLAT SALE

NEW FLATS FOR SALE
@CHROMPET
NEHRU NAGAR
NEARER TO RAILWAY STATIONS & BUS STOP
2 BHK WITH STUDY ROOM
& CAR PARKING
VISHNOO BUILDERS
9884042383
9444042383
9962542382

## LAND REQUIRED

LAND REQUIRED FOR JOINT VENTURE:
PREFERRED LOCATION
Tambaram, Chromepet, Hastinapuram, Chitlapakam,Pallavaram, Sanatorium, East Tambaram, Selaiyur, Madambakkam, Rajakilpaukam
Size:3,000 sqft to 4800sqft
ARIS Homes
98409 46815

## DISCLAIMER

Readers are advised to make appropriate enquiries while responding to advertisement in these columns. GST Road News does not vouch for any claims made by the Advertisers. The Printer, Publisher, Editor and Owner of GST Road News Shall not be held responsible for any consequences, in case such claims are found to be false.

## விஜய் கூட்டணிக்கு காங்கிரஸ் மறுப்பு

காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது. தமிழ்நாடு சட்ட சபை தேர்தலைக் கருதி திமுக உடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு காங்கிரஸ் தலைமை 'ஐந்து உறுப்பினர் குழு'வை நியமித்திருப்பதை வரவேற்கிறேன்.'இந்தியா கூட்டணி'யின் ஒற்றுமையை இந்த அறிவிப்பு வலியுறுத்துகிறது. அரசல் புரசலாக அவ்வப்போது வெளியிடப் படும் செய்திகளுக்கு இந்த அறிவிப்பு முடிவு கட்டும் என்று நம்புகிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விஜய் கூட்டணிக்கு காங்கிரஸ் தயார் இல்லை என்பது தெளிவாகியுள்ளது.

## இந்தியாவுக்காக மிகப் பெரிய சலுகை அறிவித்த ரஷ்யா!

ரஷ்யாவில் தயாரிக்கப்படும் 5வது தலைமுறை Su-57 ரக போர் விமானங்களை இந்தியாவிற்கு வழங்குவதோடு, எந்த கட்டுப்பாடுகளுமின்றி அதன் தொழில்நுட்பத் தரவுகளை பகிரவும் தயாராக இருப்பதாக ரஷ்யா அறிவிப்பு.இந்தியாவின் எதிர்கால போர் விமானத் தேவைகளுக்கு உதவும் வகையில், Su-57 உற்பத்தியை படிப்படியாக இந்தியாவிற்கு மாற்ற ஆதரவு வழங்குவோம் என ரஷ்ய அரசின் Rostec நிறுவனம் அறிவிப்பு.

## தெற்கு அந்தமான் கடலில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவானது

நவ. 24 ஆம் தேதி காற்றழுத்த தாழ்வு மண்டலமாக அது வலுபெறும். அதற்கு அடுத்த 48 மணி நேரத்தில் தென்மேற்கு வங்கக் கடலில் மேலும் தீவிரமடையவாய்ப் புள்ளது. இதனால் தமிழகத்தில் தென் மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

## அரசியலுக்கு வராத முதல்வர் மகன்

பீகார் மாநில முதல்வராக பத்தாவது முறையாக நிதிஷ் குமார் பதவி ஏற்றுள்ளார். அவரது ஒரே மகன் பெயர் நிஷாந்த் வயது 50. மென் பொறியாளர்.அவர் பெரும்பாலும் தந்தையின் அரசியலில் தலை காட்டுவதில்லை.கடந்த சில ஆண்டுகள் மட்டும் சில நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். மற்றபடி தனக்கு ஆன்மிகத்தில் தான் மிகுந்த ஈடுபாடு அரசியலில் விருப்பம் இல்லை என்று கூறினார்.

## ஓஎம்ஆர் அடுக்குமாடி குடியிருப்பில் திடீர் தீ



சென்னையை அடுத்த கேளம்பாக்கத்தில் ஓஎம்ஆர் சாலையில் அடுக்குமாடி குடியிருப்பு உள்ளது. இந்த அடுக்குமாடி குடியிருப்பில் நூற்றுக்கணக்கான குடும்பத்தினர் வசித்து வருகின்றனர்.இந்நிலையில், இந்த அடுக்கு மாடி குடியிருப்பில் நேற்று மாலை பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. தகவலறிந்து விரைந்து சென்ற தீயணைப்புத் துறையினர் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.தீ விபத்து ஏற்பட்டதும் பொதுமக்கள் அலறி அடித்துக் கொண்டு கீழே ஓடிவந்தனர் இந்த தீவிபத்தில் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. அதேவேளை, இந்த தீ விபத்துக்கான காரணம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## முடக்கத்தான் தோசை



தேவையானவை:
1. பாசிப்பருப்பு 100 கிராம், 2. முடக்கத்தான் கீரை 200 கிராம், 3.புழுங்கல் அரிசி 250 கிராம், 4. இஞ்சி ஒரு சிறிய துண்டு, 5. பூண்டு 4 பல், 6. எண்ணெய் 100 மில்லி, 7. உப்பு தேவையான அளவு

செய்முறை:
முடக்கத்தான் கீரையை ஆய்ந்து சுத்தம் செய்து கொள்ளவும். பாசிப்பருப்பை ஒரு மணி நேரமும் அரிசியை இரண்டு மணி நேரமும் ஊறவைத்தது வடிக்கவும். பின்னர் இதனுடன் முடக்கத்தான் கீரை, தோல் நீக்கி நறுக்கிய இஞ்சி, பூண்டு ஆகியவற்றை சேர்த்து நைஸாக அரைக்கவும். பின்னர் தேவையான அளவு உப்பு சேர்த்து கலந்து கொள்ளவும். இதனை ஆறுமணி நேரம் மூடி அப்படியே வைக்க வேண்டும். அடுப்பில் தோசைக்கல்லை வைத்துத் சிறிதளவு எண்ணெய் விட்டு, மாவை தோசையாக ஊற்றவும். அடுப்பை மிதமான தீயில் வைத்துத் இரண்டு பக்கமும் திருப்பிப் போட்டு வேகவைத்துத் எடுக்கவும். இதை சட்னியுடன் பரிமாறவும் சுவையான ஆரோக்கியமான மருத்துவ முடக்கத்தான் கீரை கால்வலி, மூட்டுவலி உடையவர்கள் இதனை சாப்பிடலாம்.

## மீண்டும் மக்களை சந்திக்கும் விஜய்

காஞ்சிபுரம் மாவட்ட மக்களை நாளை சந்திக்கிறார் தவெக தலைவர் விஜய்.ஜேப்பியார் பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெறும் உள்ளரங்கு நிகழ்ச்சிக்கு வருகை தர 2ஆயிரம் பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.


VISHNUSRI HOMES
Ind. House Plan
Flat Renovation
Expansion
Modular Kitchen
Sump & Compound Wall
88257 88408 / 73972 32365

KAMU'S AUTHENTIC BRAHMIN KITCHEN PROVIDES
"SAMBAR, RASAM, KOOTU, PORIYAL" FOR LUNCH & S&N INDIAN DELICACY DINNER ITEMS ON DOOR DELIVERY / DIRECT
Collection at Purushotham Nagar, Chromepet on daily/ Monthly basis. (Small and bulk orders are welcome)
99404 14187

SPECIAL INVITATION
குரோம்பேட்டையில் உள்ள பிரபல நிறுவனத்திற்கு Retd, SENIOR CITIZEN, LADIES தேவை
AGE - 45 TO 75, SSLC AND ABOVE
Work From Home
Unlimited Incentive, Only KYC Docs
73586 21949




















காஞ்சிபுரம் வடக்குமாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளர் டாக்டர் ஜி.கே.அரவிந்த் ராஜ் பிறந்தநாள் குரோம்பேட்டை லஷ்மிபுரம் இல்லத்தில் நடந்தது. திருநீர்மலை நண்பர்கள் ஸ்ரீகாந்த், சதீஷ், சுரேந்தர் ஆகியோர் நேரில் வாழ்த்துகளை தெரிவித்தனர், அவர்கள் கொண்டு வந்த பிரமாண்ட கேக்கை அரவிந்த்ராஜ் வெட்டி பிறந்தநாள் கொண்டாடினார். ரூபாய் தாள்களால் ஆன ஆள் உயர மாலை மற்றும் கீரிடத்தை அணிவித்து வாழ்த்துகளை தெரிவித்தனர். அதுபோல் காலை முதல் பல்வேறு பகுதிகளை சேர்ந்த நண்பர்கள், இளைஞர்கள், மருத்துவர்கள், கட்சியினர், உறவினர்கள் நேரில் வாழ்த்துகளை தெரிவித்தனர். டாக்டர் அரவிந்த்ராஜ், தாம்பரம் மாநகராட்சி துணைமேயர் கோ.காமராஜ் மகன் ஆவார்.

## ஆபத்தான முறையில் சாலையை கடக்கும் பொதுமக்கள்



தாம்பரத்தில் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனை திறக்கப்பட்ட பின்பு சானடோரியம் அருகே இருந்த சிக்னல் அரசு மருத்துவமனை பகுதிக்கு மாற்றப்பட்டது. இதனால் இதுவரை காசநோய் மருத்துவமனை அருகே சிக்னலை பயன்படுத்தி வந்த நோயாளிகள், துர்காநகர் பகுதியில் சேர்ந்தவர்கள் மிகவும் அவதிப்பட்டு வருகிறார்கள். மின்னல் வேகத்தில் வரும் வாகனங்களுக்கு இடையே சாலை தடுப்புகளின் இடுக்குகளில் புகுந்து செல்கிறார்கள். இதனால் அவர்கள் விபத்தில் சிக்கும் அபாயம் உள்ளது. இதை தவிர்க்க அங்கே சிக்னல் மீண்டும் அமைக்க வேண்டும் அல்லது நடை மேம்பாலம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இளைஞர்கள் 20 வயதிற்குள் திருமணம் செய்து குழந்தைகள் பெற்றுக் கொள்ள வேண்டும்: ஸ்ரீதர் வேம்பு அட்வைஸ்

இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டம் ஒவ்வொரு மாநிலத்திலும் பெரும் சிக்கலுக்குரியதாக மாறி வரும் நிலையில், ஜோஹோ நிறுவனர் ஸ்ரீதர் வேம்பு தன் எக்ஸ் பக்கத்தில், இளைஞர்கள் தங்கள் 20களில் திருமணம் செய்துகொண்டு குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்' அதைத் தள்ளிப்போட வேண்டாம் என்றும் நான் அறிவுறுத்துகிறேன். அவர்கள் சமூகத்திற்கும் தங்கள் சொந்த மூதாதையர்களுக்கும் தங்கள் மக்கள் தொகை அதிகரித்து தங்கள் கடமையைச் செய்ய வேண்டும்.இந்தக் கருத்துக்கள் பழமையானதாகத் தோன்றலாம், ஆனால் அவை மீண்டும் வரும் என்று நான் நம்புகிறேன்." எனக் குறிப்பிட்டு பதிவிட்டிருக்கிறார்.ஸ்ரீதர் வேம்புவின் பதிவுக்கு பலரும் கடும் கண்டனங்களை தெரிவித்து, அவரின் கருத்துக்கு எதிரான வாதங்களையும் முன்வைத்து வருகின்றன.

## வண்டலூர் பூங்காவில் பெண் சிங்கம் மரணம்

வண்டலூர் உயிரியல் பூங்காவில் 1700 விலங்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதில் லயன் சபாரி பகுதியில் 6 சிங்கங்கள் உள்ளன .இதில் புவனா என்ற பெண் சிங்கம் உடல் நலம் இல்லாமல் இறந்து விட்டது. இதற்கு வயது 20 .சிங்கம் இறந்ததைத் தொடர்ந்து அதனை பிரேத பரிசோதனை செய்து உடலை அடக்கம் செய்தனர்.







Published by K.MURUGANANTHAM Plot No:4/7, Padmanaban Nagar, Karumariamman Kovil First Street, Chrompet - 600 044. Printed by him B.Ashok kumar at RATHNA OFFSET PRINTERS, No:40, Peter's Road, Royapettah, Ch- 14. Editor: K.MURUGANANTHAM. RNI No. TNBIL / 2013 / 48725